Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 11 [24-04-93]    சனிக்கிழமை    ஓசை 65

## காணாமற்போன மருந்துகள் 5 நாளில் திரும்பிவந்தன

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் காணாமல்போன மருந்துப்பொருள்கள் சில நாட்களின் பின் மீண்டும் அதே இடத்தில் இருக்கக் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில வாரங்களின்முன் மேற்படி வைத்தியசாலையில் 32 ஏற்பூசி மருந்துகள் காணாமல் போனதாகவும் ஐந்து தினங்களின் பின்னர் அவை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் இவ் வைத்தியசாலைக்கு சுமார் இரண்டு வருடங்களாக வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாது அப் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் அறியவருகிறது.

# லலித் சுட்டுக்கொலை

[கொழும்பு]

அத்துலத் முதலி நேற்று மாலை கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். கிருலப்பனையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே இவர் சுடப்பட்டார்.

மார்பில் சுடுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அத்துலத்முதலி, ஆஸ்பத்திரியில் காலமானார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான இவர், முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இவ் ஆண்டில் யுத்தம் முடிவிற்கு வருமாம்

### இலங்கை வங்கியின் அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு மேற்கொண்டுவரும் இராஜதந்திர மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால், வடக்கு-கிழக்கு யுத்தம் இந்த ஆண்டில் ஒரு முடிவுக்குவரும் என்று இலங்கை வங்கியால் வெளியிடப்பட்டுள்ள சிறிலங்காவின் பொருளாதாரம் பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இராணுவம் தமக்கிடையில் உள்ள அபிப்பிராய பேதங்களைக் களையும் பட்சத்தில்தான் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவத்தின் வெற்றி தங்கியுள்ளதாக இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி சமிந்திரா பேர்டினண்டோ ஐலன்ட் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

புலிகளின் தாக்குதல்கள் இவ்வாண்டில் குறைந்திருப்பதை அவர்கள் பலவீனமாகக் கருதக்கூடாது, கடந்தவருடம் முதல் மூன்று மாதங்களில் இராணுவம் 292 பேரை இழந்தது. விமானம் மற்றும் கடற்படைக்கும் இழப்புகள் ஏற்பட்டன. இவ்வருடம் இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புகள் குறைவு. புலிகள் இம்முறை தமது கவனத்தைக் கடற்படை மீது திருப்பியுள்ளார்கள். வடக்கில் நாகதீவந்துறை கடற்படைத்தளத்தின் மீதே புலிகளின் அழுத்தம்கூடுதலாக உள்ளது என்று மேலும் தெரிவித்தார், இந்த மாதம் புலிகள் நடத்திய உக்கிரமான தாக்குதலில் 2 லெப்டினன்கள், ஒரு கப்டன் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்று எழுதியுள்ளார்.

## லலித் பற்றி சில குறிப்புக்கள்

(கொழும்பு)

நேற்று இரவு சுட்டுக்கொல்லப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான லலித் அத்துலத்முதலி. 26-11-1934இல் பிறந்தார்.

★ கொழும்பு சென். ஜோன்ஸ் கல்லூரியினதும், றோயல் கல்லூரியினதும் மாணவராவார்.

★ இவர், 1954இல் இங்கிலாந்தில் பரிஸ்டர் பட்டம் பெற்றவர்.


★ இவர்ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தின்முதுமாணி பட்டதாரி. அதேவேளை இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கப் பொருளாளர், தலைவர், செயலாளர் பதவி வகித்தவர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையராவார்.

★ தகப்பனாரின் மரணத்தைத்தொடர்ந்து அரசியலில் பிரவேசித்த லலித் அத்துலத்முதலி 1977ஆம் ஆண்டு இரத்மலானைத் தொகுதியில் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டு, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையிலும் இடம் பெற்றார்.

★ இவர் ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில், 1977இல் வர்த்தக கப்பல்துறைஅமைச்சராகவும், பின்1984 இல் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும், பதவி வகித்தவராவார்.

★ 1989இல் பிரேமதாசாவின் அமைச்சரவையில் விவசாய உணவு கூட்டுறவு துறை அமைச்சராகவும் பின்னர் 1990 இல் கல்வி உயர் கல்வி அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

★ 1991 இல் பிரேமதாசாவிற்கு எதிராகப் பாராளுமன்



### சுட்டவர்கள் தப்பினர்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியைச் சுட்டுக் கொன்றவர்கள் தப்பிச்சென்றுவிட்டதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி கூறும் தீர்வு புராணக்கதை போன்றது

### குமார் பொன்னம்பலம் சாடல்

(கொழும்பு)

"அண்மையில் ஐ. தே. க, பொதுச்செயலாளர் சிறிசேன கூரே தமது கட்சி மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்குகளையும் பெற்று வெற்றிபெறும் எனக்கூறியிருந் ... மையினருக்குச் சார்பான கட்சி என்று சிறிசேனகூரே கூறியுள்ளார். கொழும்பு மாவட்டத்தில் ஒன்றேகால் லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 78 வீதமானோர் சிங்களவர்கள். 11வீதமானோர் தமி... யுள்ளார்.

இனப்பிரச்சினையை ஜனாதிபதி பிரேமதாஸா தீர்த்து வைப்பார் என்பது புராணக் கதை போன்றதே. அவரால் தீர்க்கமுடியும் என்றால் கடந்த ...

## மேதின ஏற்பாடுகளில் கட்சிகள் இடையே போட்டி

(கொழும்பு)

மே தினக் கொண்டாட்டங்கள் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் வரவுள்ளதால் அர... பெரியளவில் ஏற்பாடு செய்வதில் ஐ. தே. கட்சியும், சுதந்திரக் கட்சியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ...

கப்பட்டுள்ளது.

இதேவேளை இராணுவம் தமக்கிடையில் உள்ள அபிப் பிராய பேதங்களைக் களையும் பட்சத்தில்தான் புலிகளுக்கு

முதல் மூன்று ... மாதங்களில் இராணுவம் 292 பேரை இழந் தது. விமானம் மற்றும் கடற் படைக்கும் இழப்புகள் ஏற்பட் டன. இவ்வருடம் இராணு

தாக்குதலில் 2 லெப்டினன்கள், ஒரு கப்டன் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்று எழுதியுள்ளார்.

# ஜனாதிபதி கூறும் தீர்வு புராணக்கதை போன்றது

## குமார் பொன்னம்பலம் சாடல்

(கொழும்பு)

"அண்மையில் ஐ. தே. க, பொதுச்செயலாளர் சிறிசேன கூரே தமது கட்சி மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக் கள் வாக்குகளையும் பெற்று வெற்றிபெறும் எனக்கூறியிருந் தார். எதன் அடிப்படையில் அவர் இப்படிக் கூறியிருந்தார் என்பது தெரியவில்லை. தமி ழர்களுக்கு ஐ. தே. க எதைக் கொடுக்க சித்தமாக இருக் கின்றது என்பதை நான் சிறி சேனகூரேயிடம்கேட்கிறேன்." இவ்வாறு இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள் ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன் றுக்கு அவர் எழுதிய குறிப்பு ஒன்றில், ஐ. தே. க. சிறுபான் மையினருக்குச் சார்பான கட்சி என்று சிறிசேனகூரே கூறியுள் ளார். கொழும்பு மாவட்டத் தில் ஒன்றேகால் லட்சம் வாக் காளர்கள் உள்ளனர். இவர் களில் 78 வீதமானோர் சிங்கள வர்கள், 11வீதமானோர் தமி ழர்கள், 9 வீதமானோர் முஸ் லிம்கள். அப்படியாயின் கொழும்பு மாவட்டத்தின் 46 உறுப்பினர் வேட்பாளர் பட்டியலில் 35 சிங்களவர்கள், 5 தமிழர்கள், 4 முஸ்லிம்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால், ஐ. தே. க. பட்டிய லில் 35 சிங்களவர்கள், ஒரு தமிழர், 4 முஸ்லிம்கள் இடம் பெற்றுள்ளனர். இந்த அடிப் படையில் தமிழரின் வாக்கு களை ஐ. தே. க. கோர முடி யுமா எனக் கேள்வி எழுப்பி யுள்ளார்.

இனப்பிரச்சினையை ஜனாதி பதி பிரேமதாஸா தீர்த்து வைப்பார் என்பது புராணக் கதை போன்றதே. அவரால் தீர்க்கமுடியும் என்றால் கடந்த நாலரை வருடங்களாக என்ன செய்தார்? ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை உறுதிமொழி களை வழங்கினார். கடந்த ஆண்டு இறுதிக்குள் பிரச் சினை தீர்க்கப்படும் என்றார். இவையெல்லாம் அவரால் பிரச்சினையைத் தீர்க்க முடி யாது என்பதையே காட்டுகின் றது என்றும் குமார் பொன் னம்பலம் தனது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ. தே. க விற்கோ, சுதந் திரக்கட்சிக்கோ அல்லது ஜன

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மன்னாரில் மீண்டும் அதிரடி; 2 படையினர் பலி; 2 காயம்

## ஆயுதங்களும் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள தள்ளாடி- மாந்தை இராணுவ முகாம் களுக்கு இடையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மின் னல் வேக அதிரடித் தாக்குதல் ஒன்றில் இரு படையினர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் ஆயுதங்கள் சில வற்றையும் புலிகள் கைப்பற்றி னர்.

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் தள்ளாடி சிறி லங்கா இராணுவ முகாமிற்கும் மாந்தை முகாமிற்கும் இடை யில், மாந்தையிலிருந்து தள் ளாடி இராணுவ முகாம் நோக்கி உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த சிறில ங்கா இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்ட னர்.

விடுதலைப் புலிகள் மேற் கொண்ட இருநிமிட அதிரடித் தாக்குதலின்போது இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மற்றி ருவர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தாக்குதலின்போது விடு தலைப் புலிகளால் கைப்பற் றப்பட்ட ஆயுத விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| ★ ரி56-2 ரக துப்பாக்கி | - 03 |
| ★ ஏ.கே. கோல்சர் | - 02 |
| ★ ரவைக்கூடுகள் | - 09 |
| ★ நடுத்தர ரவைகள் | - 366 |
| ★ தொப்பி | - 01 |

## மன்னார் தீவில் பதற்றம் இராணுவ சோதனை தீவிரம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியான மன்னார் தீவில் பதற்றநிலை உருவாகி யுள்ளதாக அங்கிருந்து கிடைக் கும் செய்திகள் தெரிவிக்கின் றன.

மன்னார்தீவில் விடுதலைப் புலிகள் அண்மைக்காலமாக இராணுவத்தினர் மீது நடாத் திய தாக்குதல்களைத் தொட ர்ந்து மேற்படி பகுதிகளில் கடமைபுரியும் சிறிலங்கா இரா ணுவத்தினர் மத்தியிலும் பீதி யும், பதற்றமும் தோன்றி யுள்ளது.

இதைத் தொடர்ந்து மன் னார் நகரைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடாத்தப் பட்டுவந்த இராணுவ ரோந்து நடவடிக்கைகளை இராணுவத் தினர் குறைத்துள்ளனர். புற நகர்ப் பகுதிகளில் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே தற்பொழுது இராணுவ ரோந் துகள் இடம்பெற்றுவருவதாக வும் மேற்படி பகுதிகளில் வாழும் மக்கள் கடுமையான சோதனைக்குட் படுத்தப்படுவ தாகவும் அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் கூறுகின்றன.

26-11-1934இல் பிறந்தார்.

★ கொழும்பு சென். ஜோன்ஸ் கல்லூரியினதும், றோயல் கல்லூரியினதும் மாணவராவார்.

★ இவர், 1954இல் இங்கிலாந்தில் பரிஸ்டர் பட்டம் பெற் றவர்.

★ இவர்ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தின்முதுமாணி பட்ட தாரி, அதேவேளை இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கப் பொருளாளர், தலைவர், செயலாளர் பதவி வகித்தவர். ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையராவார்.

★ தகப்பனாரின் மரணத்தைத்தொடர்ந்து அரசியலில் பிர வேசித்த லலித் அத்துலத்முதலி 1977ஆம் ஆண்டு இரத்மலா னைத் தொகுதியில் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டு, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையிலும் இடம் பெற்றார்.


★ இவர் ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அமைச்சரவையில், 1977இல் வர்த்தக கப்பல்துறைஅமைச்சராகவும், பின்1984 இல் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும், பதவி வகித்தவராவார்.

★ 1989இல் பிரேமதாசாவின் அமைச்சரவையில் விவசாய உணவு கூட்டுறவு துறை அமைச்சராகவும் பின்னர் 1990 இல் கல்வி உயர் கல்வி அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

★ 1991 இல் பிரேமதாசாவிற்கு எதிராகப் பாராளுமன் றத்தில் குற்றவியல் விசாரணை கோரும் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்.

★ இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் கொலை முயற்சி யில் இருந்து லலித்அத்துலத் முதலி தப்பியவர் என்பது குறிப் பிடத்தக்கது. இதில் 1987 இல் இடம்பெற்ற பாராளுமன்றக் குண்டுவீச்சில் படுகாயமடைந்தார்.

★ லலித் அத்துலத்முதலி வர்த்தகக் கப்பல்துறை அமைச் சராக இருந்தபோதே மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்தவராவார்.



## சுட்டவர்கள் தப்பினர்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியைச் சுட்டுக் கொன்றவர்கள் தப்பிச்சென்று விட்டதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# மேதின ஏற்பாடுகளில் கட்சிகள் இடையே போட்டி

(கொழும்பு)

மே தினக் கொண்டாட்டங் கள் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் வரவுள்ளதால் அர சியல் கட்சிகள் மேதினக் கொண்டாட்டங்களில் தீவிர அக்கறை காட்டிவருவதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வழமைபோல் இம்மேதினக் கொண்டாட்டங்களின் போது ஊர்வலங்களும், கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. இவற்றைப் பெரியளவில் ஏற்பாடு செய் வதில் ஐ. தே. கட்சியும், சுதந் திரக்கட்சியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் மும்முரமான போட்டியில் ஈடு பட்டுள்ளன.

இம் மேதின கொண்டாட் டங்கள் தமது கட்சிகளின் பலத்தைக்காட்ட ஒரு சந்தர்ப் பமாக இக்கட்சிகள் கருதுவதி னாலேயே இவ்வாறான போட்டி நிலவுவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

1992 டிசம்பர் க. பொ. த. (சா-த) பரீட்சை

# பளை பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1992 டிசம்பரில் நடை பெற்ற க. பொ. த. (சா-த) பரீட்சைக்கு பளைப்பகுதியில் உள்ள பரீட்சைநிலையங்களில் தோற்றிய பரீட்சார்த்திகளுக் கான சங்கீதம், நடனம் ஆகிய செயன்முறைப் பரீட்சைகள் எதிர் வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். சாவகச் சேரி இந்துக்கல்லூரியில் நடை பெறவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள் ளது.

மேற்படி பரீட்சார்த்திகள் இப் பரீட்சை நிலைய பிரதம பரீட்சகரிடம் இருந்து அனுமதி அட்டைகளை சேகரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர். (பா)

## 'டிப்ளோமா' நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி 1993-94 ஆம் கல்வி ஆண்டிற் கான மாணவர்களை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை 27ஆம் 28ஆம் திகதிகளில் யாழ் கல்வித் திணைக்களத் தில் நடைபெறவுள்ளது என யாழ். பிரதேச கல்விப் பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.

## ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுவோ ருக்கான சித்திரைமாத ஓய் வூதியக் கொடுப்பனவு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை வழக்கம் பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கிக் காரியாலயத் தில் வைத்து வழங்கப்படும் என சங்கப் பொதுமுகாமை யாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை

# இலங்கைக்கான அதிகாரி இன்று யாழ். வருகிறார்

## புலிகளையும் சந்தித்து பேசுவார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி டொமினிக் டெரேடா உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொ ண்டு இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

யாழ். வரும் இவ் அதிகாரி மூன்று தினங்கள் இங்கு தங்கி யிருப்பார் எனவும் இதன் போது இவர் விடுதலைப்புலி களின் பிரமுகர்களைச் சந்திப்பதுடன் சில முக்கிய இடங்களையும் பார்வையிட வுள்ளார். அத்துடன் சில செயல் திட்டங்கள் பற்றியும் ஆராய்வார் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை இவ் அதிகாரி கடந்த நவம்பர் மாதம் இங்கு விஜயம் ஒன்றை மேற்கொண் டார் என்பது குறிப்பிடத்தக் கது. (நி)

# கொழும்பில் தடியடி 50 மாணவர்கள் காயம்

## ஏழுபேர் கவலைக்கிடம்

[கொழும்பு]

கொழும்பில் உண்ணாவிரத மிருக்கும் சுதேச மருத்துவபீட மாணவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடாத்திய மாணவர்கள் மீது பொலிசார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியதுடன் குண்டாந்தடி பிரயோகத்தையும் மேற் கொண்டதில் 50 மாணவர் கள் காயமடைந்ததாகவும் இதில் ஏழு பேர் படுகாய மடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதேச மருத்துவத்துடன் மேலைத்தேய மருத்துவத்தை யும் இணைக்குமாறு கோரி 12 மாணவர்கள் கடந்த மூன்று நாட்களாக கொழும் பில் உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே.

மேற்படி உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களிற்கு ஆதரவு தெரிவித்து நேற்று கோட்டை ரயில் நிலையம் முன்பாக 200ற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கவே பொலிசார் கண் ணீர்ப்புகைக்குண்டுகளைவீசிய தாகவும் குண்டாந்தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 50 மாணவர்கள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### நெல்லிக்காய்

நாற்றுவிதைக்கு நன்கு முற்றிய நெல்லிக்காய் தேவை -மில்க்வைற் (சி/6489)

### சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல.288, நாவலர் வீதி ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)யாழ்ப்பாணம் (சி/6356)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

சீயக்காய் வெந்தயம், பயறு மற்றும் உட லுக்கும் கேசத்திற்கும் சுகமளிக்கும் மற்றும் மூலிகைகள் கொண்டு தயாரித்தது. வெந்நீரில் ஊறவைத்துப் பாவித்து உச்சப்பலனைப் பெறுங்கள். மில்க்வைற். [சி 6470]

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு வயது 50 நாட்கள். யூசி அகற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடிச் சந்தி, நவாலி தெற்கு. (4750)

### சிறந்த சேவைக்கு பாராட்டு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பருத்தித்துறைப் பிரிவில் செஞ்சிலுவைச் சங்க சேவையில் சிறந்த சேவையாற்றிய தொண்டராக திரு. ச. தவராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பொதுக் கூட்டத்தில் திரு. தவராஜா பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட இருக்கின்றார். (25

### வீட்டுப் பொருள்கள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

வீட்டுக்காரர் இல்லாத நேரம் பார்த்து சுமார் பதினையாயிரம் ரூபா பெறுமதியான குத்துவிளக்குகள் தூண்டாமணி விளக்கு, கிடாரம் முதலான வீட்டுப்பொருள்கள் பலவற்றைக் களவாடிச் சென்றுள்ள சம்பவம் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது,

இத்திருட்டுச் சம்பவம் குறித்து காவல்துறையில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.(42)

### சிவப்புக் காகம்

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தித் திட்டப் பகுதியில் சிவப்பு நிறமுடைய காகம் ஒன்று தென்படுவதாக அப்பகுதி வாசிகள் கூறியுள்ளனர். கறுப்பு நிறக் காகங்களுடன் சேர்ந்து அங்கு மிங்கும் பறந்துதிரிந்து காணப்படுகிறதாம். இக் காகம் மரக் கிளையில் அல்லது நிலத்தில் இருக்கும்போது இளஞ் சிவப்பு நிறத்தில் காணப்படுவதாகவும், பறக்கும்போது கடும் சிவப்பு நிறத்தில் தென்படுவதாகவும், கூறப்படுகின்றது.

---

பதிவு

**செய்து கொள்ளுங்கள்**

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

## ஜெசிந்தாரா உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

[சி-6438]

---

### அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில்]

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: **25. 04. 1993** ஞாயிறு மாலை 5. 00 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5 00 — 5 45 வீணை இசை
செல்வி ஜனனி சொக்கலிங்கம் — வீணை
செல்வன் கே. கண்ணதாசன் — மிருதங்கம்
செல்வன் பி. ரதிரூபன் — கடம்

5. 45 — 6. 45 இசைக் கச்சேரி
திருமதி சத்திதேவி சிவகுமாரன் — பாட்டு
செல்வன் எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் — கடம்

6. 45 — 7. 15 மங்கள விளக்கேற்றல்
திரு.எஸ் உதயகுமார் (உரிமையாளர், கலைமகள் வர்த்தகநிலையம்)
மு சிவப்பிரகாசம் அவர்கள் (பொது முகாமையாளர், யாழ். ப. நோ. கூ. சங்கம்)
தலைமையுரை சூசைப்பிள்ளை சிறில் அவர்கள் (தலைவர், யாழ். ப. நோ. கூ. சங்கம்)
பிரதம விருந்தினர்கள் உரை: திரு. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், யாழ். மாநகரசபை)
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் (தலைவர், நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

7. 15 — 8. 45 சிறப்புக் கச்சேரி
திரு. என் கே. பத்மநாதன் )
திரு. வி. கே பஞ்சமூர்த்தி )— நாதஸ்வரம்
திரு. ஆர். கேதீஸ்வரன் )

தவில்: திரு. கே. ஆர். புண்ணியமூர்த்தி, திரு. பி. முருகதாஸ்
திரு ரி. உதயசங்கர், திரு ஆர். எஸ். ரவீந்திரன்

**இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !**

★ ஒலியமைப்பு: ''சிங்கிளயர்'' நித்தியானந்தன், யாழ்ப்பாணம்
★ ஒளியமைப்பு; ''மனோ லைட்'' மனோகரன், கோப்பாய்

மு. இராமலிங்கம்
செயலாளர்

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

[சி-6486]

---

யாழ் / சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதான சீர்திருத்த நிதிக்காக பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்படும்

## மாபெரும் இசைநிகழ்ச்சி

காலம் : 25 - 04 - 93 ஞாயிறு மாலை 6.00மணி
இடம் : பாடசாலை மைதானம்

★ வட்டூர் பாமி இசைக்குழுவினரின்

**இசைமாலை**

★ **நகைச்சுவைநாடகம்**

★ ''உதயம்'' ''கூவுகுயிலே'' ஒலிப்பதிவுநாடா புகழ் யாழ். ரமணனின் இசையமைப்பில் உருவான

## ராஜன் இசைக் குழுவின் இன்னிசைகானம்

பிரவேசம் ரூபா **10/**

விளம்பர அன்பளிப்பு:

**அர்ச்சனா நகை மாளிகை**

120B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(4734)

---

## 5-ம் மாத நினைவலைகள்

### கப்டன் மலரவன்

(லியோ, புயற்பறவை)

(காசிலிங்கம் விஜிந்தன்)

ஐந்து மாதங்கள் ஆனாலும் - எம் விழிகள்
சிந்தும் கண்ணீர் ஓயவில்லை - நின் பிரிவால்
ஏங்கும் நெஞ்சங்கள் துயர் துடைக்க
இங்கு மீண்டும் வந்து உதித்திடுவாய்.

– குடும்பத்தினர்.

[4748]

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-24

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ சண்டி [கிருஷ்ணபிள்ளை செல்வநாயகம் - தம்பிலுவில் -அம்பாறை]

மட்டு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையின்போது துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ வேல்வேந்தன் [எஸ். சுப்பிரமணியம் - சித்தாண்டி -மட்டு.]

1987 ஆம் ஆண்டு மட்டு - நரிப்புல் தோட்டப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

லதா [மகேன் ஞானச்சந்திரன் - மூன்றாம் ஒழுங்கை, வேலூர் குடியிருப்பு. கல்லடி - மட்டு.]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

முகமது [இராசமாணிக்கம் ரவிநாதன் - பலாவிக்குடி

---

**இரண்டாவது அகவையை பூர்த்தியாக்கி**

**மூன்றாவது ஆண்டினுள் இன்று காலடி வைக்கும்**

அழகுநிலா நகைமாடம்

## அழகுநிலா நகைமாடத்தினர்

தமது ஸ்தாபன வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் சகலருக்கும்

தமது நன்றியையும், நல்லாசிகளையும் பேருவகையுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

வளரும் ஆண்டுகளிலும் தமது வளர்ச்சிக்கு தங்கள் ஆதரவை வேண்டியுள்ளார்கள்.

நம்பிக்கை, நாணயம், நல்ல தரம், மாற்றுக்குறையா நகைகளை பெற்றுக் கொள்வதானால்

டத்தில் திரு. தவராஜா
பாராட்டப்பட்டுக் கௌரவிக்
கப்பட இருக்கின்றார். ( 25

[சி-6438]

செயலாளர்

[சி-6486]

தலைவர்

இரண்டாவது அகவையை பூர்த்தியாக்கி

மூன்றாவது ஆண்டினுள் இன்று காலடி வைக்கும்

# அழகுநிலா நகைமாடத்தினர்

தமது ஸ்தாபன வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் சகலருக்கும் தமது நன்றியையும், நல்லாசிகளையும் பேருவகையுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

வளரும் ஆண்டுகளிலும் தமது வளர்ச்சிக்கு தங்கள் ஆதரவை வேண்டியுள்ளார்கள்.

நம்பிக்கை, நாணயம், நல்ல தரம், மாற்றுக்குறையா நகைகளை பெற்றுக் கொள்வதானால்

தயங்காமல் நாட வேண்டிய ஸ்தாபனம்

# அழகு நிலா நகைமாடம்

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

இன்று மூன்றாவது ஆண்டினுள் புகும்

அழகுநிலா நகைமாடத்திற்கு

எமது நல்லாசிகள்

# தமிழ்பரிதி நகைமாடம்

**நவீன சந்தை, சாவகச்சேரி.**

தரம் குன்றா தங்கத்தை தரமான விலையில் பெற்றுக் கொள்ள

தயங்காமல் நாடவேண்டிய ஸ்தாபனம்

# தமிழ்பரிதி நகைமாடம்

(சி-6485)

**1993-04-24**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ சண்டி [கிருஷ்ணபிள்ளை செல்வநாயகம் - தம்பிலுவில் - அம்பாறை]

மட்டு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையின்போது துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ வேல்வேந்தன் [எஸ். சுப்பிரமணியம் - சித்தாண்டி -மட்டு.]

1987 ஆம் ஆண்டு மட்டு - நரிப்புல் தோட்டப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

லதா [மகேன் ஞானச்சந்திரன் - மூன்றாம் ஒழுங்கை, வேலூர் குடியிருப்பு. கல்லடி - மட்டு.]

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

முகமது [இராசமாணிக்கம் ரவிநாதன் - பலாவிக்குடியேற்றம், பொலிகண்டி - வல்வெட்டித்துறை]

1988 ஆம் ஆண்டு மட்டு - கொம்மாந்துறைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சூரி [முத்துலிங்கம் பத்மநாதன் - கொம்மாந்துறை, செங்கலடி - மட்டு.]

மட்டு - கிரானில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

நளினன் [மணியம் தட்சணாமூர்த்தி - கிரான் - மட்டு ]

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன யாழ் - நாவாந்துறை றோமன்கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியரான செட்டிகுளம் வாசி.

1989ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சங்கர் [ — கண்டி - மலையகம்]

யாழ் - புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

கப்டன் ரங்கன் [துரைசிங்கம் ஜெயரங்கன் புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்.]

கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் -

பாரத் [கிளிநொச்சி]

இதே மாவட்டத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உமையாள்புரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண், மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்.

1992ஆம் ஆண்டு மட்டு - வவுணைத்தீவு இராணுவ முகாம் அருகிலுள்ள ஆற்றில் சடலமாகக் கிடந்த தமிழ்ப் பெண்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/6486]

சிந்தனைக்கு

தந்தை தொடங்கி தனயன் தொடர
தணியாது நடக்கும் விடுதலைப் போர்
தலையாய வெற்றி எய்வது திண்ணம்.
— பைரன் பிரபு.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## ஒரு சந்ததியின் பிரச்சினையல்ல

விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் இராணுவ யுக்திகள் மிகவும் முன்னேற்றகரமானவை. இராணுவ ஆய்வாளர்களுக்கு அதிர்ச்சியை அளிக்கக் கூடியவை. ஆனால், போரில் கிடைக்கும் வெற்றிகளுக்குத் தனியாக இராணுவ தந்திரோபாயங்கள் மட்டும் காரணமல்ல. விடுதலைப் புலிகளின் இலட்சியப் பற்றும், மனவுறுதியும் சேர்ந்தே வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. இதுவே, சிங்கள இராணுவத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த போராளிகளையும், இராணுவ தளபாடங்களையும் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளால் உயர்வான சாதனைகள் பலவற்றைச் சாதிக்க முடிகின்றது. சிறிலங்கா இராணுவத்தை தமது குறிக்கோள்கள் எய்த முடியாதபடி பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன.

இந்த வரிசையிலேயே இன்று மன்னார் தீவில் இடம்பெறும் தாக்குதல்களும் உள்ளன. மன்னார்தீவு நான்குபக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதோடு, பிரதான நிலப்பரப்பில் இருந்து மன்னார்தீவை தொடுக்கும் வீதியும் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிலேயே உள்ளதாக சிறிலங்கா இராணுவம் தெரிவித்துவந்தது. ஆனால், கடந்தசில வாரங்களில் மன்னார்தீவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்கள் மன்னார்தீவு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. மறுவளமாகக் கூறின், விடுதலைப் புலிகளின் இத் தாக்குதல்கள், தீவை இராணுவத்தினால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா என்ற வினாவை எழுப்பியுள்ளது என்றும் தெரிவிக்கலாம்.

மன்னார்தீவில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதல்கள் ஒப்பீட்டு ரீதியில் சிறிய தாக்குதல்களாக இருப்பினும், இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பின் அடிப்படையில் - இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டவை என்பதே முக்கியமானதாகும். இத்தாக்குதலின் தாக்கம், மன்னார்தீவை இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நடைமுறைப்படுத்திவரும் திட்டத்தினை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை இராணுவத்திற்கு ஏற்படுத்தியுள்ளது எனக் கூறுவதில் தவறில்லை.

ஆனால், இது விடுதலைப் புலிகளைப்பொறுத்து புதியதொன்றல்ல. அவர்களின் பல்வேறு சாதனைகளில் இதுவுமொன்று. ஆனால், பெரும் ஆட்பலத்துடனும், ஆயுதபலத்துடனும் மோதலுக்குத் தயா

### தமிழக இடைத்தேர்தலின் போது

# காங்கிரஸ் கட்சிக்கு பாட். மக்கள் கட்சி ஆதரவு

### டாக்டர் ராமதாஸ் அறிவிப்பு

(சென்னை)

எதிர்வரும் பழனிமக்களவை இராணிப்பேட்டை சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு பாட்டாளி மக்கள் கட்சி தனது முழு ஆதரவை அளிக்க முடிவு செய்துள்ளது. காங்கிரஸ்கட்சிக்கான தனது ஆதரவை நேற்றுமுன்தினம் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் வெளியிட்டார்.

இரு கட்சிகளுக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசின் மக்கள் விரோத போக்கை கருதி காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவது அவசியம் என்பதால் பாட்டாளி மக்கள் கட்சி இந்த முடிவை எடுத்ததாக ராமதாஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலின்போது காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவை பாட்டாளி மக்கள் கட்சி வெளியிட்டமை தமிழக அரசியல் அரங்கில் புதிய திருப்பு முனை என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தனிநாடாக வேண்டுமா? எரித்திரியாவில் வாக்கெடுப்பு

### 30 வருட போரின் பின் மக்கள் வாக்களிப்பு

(அஸ்மாரா)

எத்தியோப்பியாவில்இருந்து முப்பதுவருட ஆயுதப் போரிற்கு பின்னர் இருவருடங்களுக்கு முன் தனிநாடாக பிரிந்த எரித்திரியா நாட்டில் அந்நாடு சுதந்திரதனி நாடாக இருக்க வேண்டுமா என்று அறியும் சர்வஜன வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

இரு வருடங்களுக்கு முன் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி போராளிகள் தமது 30 வருடகால ஆயுதப்போரின் பின்னர் எரித்திரியாவில் இருந்து எத்தியோப்பிய நாட்டு ஆட்சியை விரட்டியடித்தனர். அன்றுமுதல் அங்கு இப்போராளிகளின் இடைக்கால அரசு பதவி ஏற்றது.

நேற்று நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் ஒரேயொரு இலகுவான கேள்வியே கேட்கப்பட்டிருந்தது எரித்திரியா சுதந்திர தன்னாட்சி நாடாக மாறவேண்டுமா? என்பதே அவ்வினாவாகும். இத் தேர்தலில் வாக்களிக்க 8 ஆயிரம் வாக்காளர்கள் தகுதிபெற்றிருந்தனர். இதைத்தவிர மூவாயிரம் எரித்திரியர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இவர்களும் தபாலில் வாக்களிக்க அனுமதிக்கப் பட்டனர்.

எத்தியோப்பிய அரசுக்கெதிரான 30 வருடப்போர், ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் என்பவற்றிற்கு பின் சுதந்திரத்திற்கான இந்த தேர்தல் வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என்றே தெரிவிக்கப்படுகின்றது. தலைநகரில் மக்களின் மனஉணர்வுகளும் இதையே பிரதிபலிப்பதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் முடிவு ஆதரவாகவே இருக்கும் என்று எதிர்பார்த்துள்ள இடைக்கால அரசு ஏற்கனவே அரசியல்சாசனத்தை தயாரிக்க ஆரம்பித்துள்ளது. இதேசமயம் எத்தியோப்பாவில் எரித்திரியா தனி நாடாக மாறுவதற்கு சில எதிர்ப்புகள் காணப்பட்ட போதிலும் தேர்தல் முடிவுகளைதாம் மதித்து நடக்கப்போவதாக எத்தியோப்பிய அரசு அறிவித்துள்ளது.

## மத்திய பொஸ்னியாவில் மீண்டும் உக்கிர மோதல்

(சரஜேவோ)

மத்திய பொஸ்னியாவில் குரோவேசியன் சேர்பியப் படைகளுக்கும் முஸ்லிம் படைகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் மீண்டும் தீவிரமாக ஆரம்பித்துள்ளது. ஐ நா. ஏற்பாட்டில் யுத்த நிறுத்தம் ஒன்று இப்பகுதியில் கொண்டுவரப்பட்ட போதிலும் மோதல் தீவிரமாகி வருகின்றது.

கடந்த சில நாட்களாக முற்றுகைக்குள்ளாகியுள்ள முஸ்லிம் படைகள் சில முன்னேற்றங்களை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நகரின் அருகேயுள்ள இரு முக்கிய மலைக்குன்றுகளை இவர்கள் மீளக் கைப்பற்றியுள்ளனர்.

மோதல் தீவிரமாகி வருவதை யடுத்து இப்பகுதியில் பணியிலிருந்த ஐ நா. அமைதிப்படையினர் அங்கிருந்து வாபஸ்பெற முடிவு செய்துள்ளனர். ''நாம் இறக்கும்வரை இந்த போர் நிறுத்தப்பட மாட்டாது'' என போரிடும் இரு தரப்பினரும் வலியுறுத்தி வருவதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் சேர்பியரின் கட்டுப்பாட்டு எல்லைக்குட்பட்ட முஸ்லிம் கிராமங்களில் சிறுவர்கள் உட்பட பலரின் சிதைந்த சடலங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவமேற்பார்வை

## ஒழுக்கம் இருந்தாலே

## எதிர்க்கட்சி வெற்றி பெறின் பெரும் அரசியல் மாற்றம்

### காமினி சொல்கிறார்

[கொழும்பு]

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஏழு மாகாணசபைகளிலும் எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்ற பின்னர் இந்நாட்டில் ஒரு பெரும் அரசியல் மாற்றம் ஏற்படும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உப தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று வடமேல் மாகாணத்தில் ஆட்சியை அமைக்கவுள்ள எமது கட்சியின் முதலாவது நடவடிக்கை குருநாகல் மாநகர சபையைக் கலைப்பதாகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## விமானப் படையினர் சடலம் மொரவேவாவில் மீட்பு

[திருமலை]

இரண்டு விமானப்படைச் சிப்பாய்களின் சடலங்கள் திருமலை மொரவேவா பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட காயங்களால் மரணமடைந்திருக்கலாம் என இவர்களின் சடலங்களைப் பரிசோதித்ததிலிருந்து தெரிய வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு விமானப் படையினரும் திருமலை மொரவேவா விமானப்படைத் தளத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன் அதிகாலை ஒரு மணியளவில் இந்த விமானப்படைத் தளத்திலிருந்து ரோந்து அணி ஒன்று புறப்பட்டுச் சென்றதாகவும் அவ்வேளையிலேயே இவர்களுக்கு மரணம் சம்பவித்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

### பெண் பொலிசார் கடமையில்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின் போது எல்லைப் புறப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிசார் தத்தம் சொந்தப் பகுதிகளில் தேர்தல் கடமையிலீடுபடுத்தப்படவுள்ளனர். இம்முறை முதல் தடவையாக பெண் பொலிசாரும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## பிரேமதாசா என் நண்பர் ஜே.ஆர். புகழாரம்

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவும் நானும் வெற்றி, தோல்வி நல்லது, கெட்டது நல்லநேரம் கெட்டநேரம் ஆகிய எல்லா வேளைகளிலும் ஒன்றுபட்டு உழைத்துள்ளோம் ஒன்றுபட்டே செயல்பட்டோம் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். களனியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே ஜெயவர்த்தனா இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரேமதாசா எனது உற்ற நண்பன் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கட்சி வெற்றிபெற்ற போதும் தோல்வியடைந்த போதும் அவர் என்னுடனேயே இருந்துள்ளார் கட்சியை 1956 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீளக்கட்டி எழுப்புவதிலும் அவரே பெரும் பங்காற்றினார் என ஜெயவர்தனா மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் நிலையத்தில் அமைச்சர் படம் அகற்றம்

(கொழும்பு)

கொழும்பு புறநகர் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியின் அலுவலகத்தில் தொங்க விடப்பட்டிருந்த பெண் அமைச்சர் ஒருவரின் படம் எதிர்கட்சி வேட்பாளர்களின் ஆட்சேபத்தை அடுத்து அகற்றப்பட்டது.

அமைச்சர் ஒருவரின் படம் பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தில் இருப்பது அவர் ஆளும் கட்சி ஆதரவாளர் டனர். இதையடுத்தே படம் அகற்றப்பட்டது.

### கூரை வீழ்ந்து அகதிகள் காயம்

வவுனியாவில் கடந்தவாரம் சுழல் காற்றுடன் கூடிய மழை பெய்ததனால் நெலுக்குளம் அகதி முகாமின் கூரை தூக்கி வீசப்பட்டதில் அங்கு வசித்த அகதிகளில் 10 பேர் காயமடைந்தனர். இவர்களில் நான்கு சிறுவர்களும்

ளதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. மறுவளமாகக் கூறின், விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்கள், தீவை இராணுவத்தினால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா என்ற வினாவை எழுப்பியுள்ளது என்றும் தெரிவிக்கலாம்.

மன்னார்தீவில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதல்கள் ஒப்பீட்டு ரீதியில் சிறிய தாக்குதல்களாக இருப்பினும், இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பின் அடிப்படையில் - இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டவை என்பதே முக்கியமானதாகும். இத்தாக்குதலின் தாக்கம், மன்னார்தீவை இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நடைமுறைப்படுத்திவரும் திட்டத்தினை இராணுவம் மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை இராணுவத்திற்கு ஏற்படுத்தியுள்ளது எனக் கூறுவதில் தவறில்லை.

ஆனால், இது விடுதலைப் புலிகளைப்பொறுத்து புதியதொன்றல்ல. அவர்களின் பல்வேறு சாதனைகளில் இதுவுமொன்று. ஆனால், பெரும் ஆட்பலத்துடனும், ஆயுதபலத்துடனும் மோதலுக்குத் தயாராகவுள்ள இராணுவத்தின் சில பகுதிகளில், வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் சிறிய தாக்குதல்களால் இராணுவத் திட்டங்களையே மீள்பரிசீலனை செய்யவைக்கும் நிலை உருவாக்கப்படுகின்றது. இந்நிலையே இன்று மன்னாரிலும் உருவாகியுள்ளது. இது இராணுவத்தைப் பொறுத்து பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

ஆனால், விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் இவ்வாறான தாக்குதல் குறித்தும், அவற்றின் சிறப்பு குறித்தும், விடுதலைப் புலிகளுடன் மோதிய சிறிலங்கா, இந்திய இராணுவத்தளபதிகளே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர். தற்பொழுது அரசியல்வாதிகளும் விடுதலைப் புலிகளின் அத்திறமையினைப் பேசத் தொடங்கியுள்ளனர்.

அண்மையில், சிறிலங்கா பாராளுமன்றத்தில், விடுதலைப் புலிகள் பற்றிப் பிரஸ்தாபித்த சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா விடுதலைப்புலிகள் எந்நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த மாதிரியும் தாக்குதல் நடத்தக்கூடியவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை வெளிக்காட்டவே இதனைத் தெரிவித்திருப்பினும், புலிகளின் பலம்பற்றிக் கூறாமல் அவரால் கடந்து செல்ல இயலவில்லை.

ஆனால்இன்று, சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றைக்காணாது இராணுவத் தீர்வொன்றைக் காண முற்படுவது நிலைமையைச் சரியாகக் கணிப்பிடாமையினால் உருவானதொரு நிலை அல்ல. இதே, கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கவேண்டுமானால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணத்தினாலேயே எழுந்ததாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது தற்போதைக்குச் சாத்தியமானதொன்றல்ல. ஆனால், இனப்பிரச்சினையை இராணுவ அணுகுமுறையால் தீர்த்துவைக்க அரசாங்கம் விரும்புமானால், அதில் ஒரு போதும் வெற்றி பெறப்போவதில்லை. ஏனெனில், இது ஒருவரின் அல்லது ஒரு சந்ததியின் பிரச்சினையல்ல. ஒரு இனத்தின், அதுவும் மண்ணுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இத்தேசிய இனம் சுதந்திரம் பெறும் வரை இப்போர் தொடர்ந்து நடைபெறும். இவ்வாறான படிப்பினைகள் உலகின் பல பாகங்களிலும் போதியளவுண்டு.

## மீண்டும் உக்கிர மோதல்

(சரஜேவோ)

மத்திய பொஸ்னியாவில் குரோவேசியன் சேர்பியப் படைகளுக்கும் முஸ்லிம் படைகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் மீண்டும் தீவிரமாக ஆரம்பித்துள்ளது. ஐ நா. ஏற்பாட்டில் யுத்த நிறுத்தம் ஒன்று இப்பகுதியில் கொண்டுவரப்பட்ட போதிலும் மோதல் தீவிரமாகி வருகின்றது.

கடந்த சில நாட்களாக முற்றுகைக்குள்ளாகியுள்ள முஸ்லிம் படைகள் சில முன்னேற்றங்களை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நகரின் அருகேயுள்ள இரு முக்கிய மலைக்குன்றுகளை இவர்கள் மீளக் கைப்பற்றியுள்ளனர்.

மோதல் தீவிரமாகி வருவதை யடுத்து இப்பகுதியில் பணியிலிருந்த ஐ நா. அமைதிப்படையினர் அங்கிருந்து வாபஸ்பெற முடிவு செய்துள்ளனர். ''நாம் இறக்கும்வரை இந்த போர் நிறுத்தப்படமாட்டாது'' என போரிடும் இரு தரப்பினரும் வலியுறுத்தி வருவதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் சேர்பியரின் கட்டுப்பாட்டு எல்லைக்குட்பட்ட முஸ்லிம் கிராமங்களில் சிறுவர்கள் உட்பட பலரின் சிதைந்த சடலங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இராணுவமேற்பார்வை பெனாசீர் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

எதிர்வரும் பாகிஸ்தான் தேர்தல் இராணுவத்தின் மேற்பார்வையின்கீழ் நடைபெற வேண்டும் என பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாசீர் பூட்டோகோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

இதனைத்தொடர்ந்தே மேற்படி கோரிக்கையை பெனாசீர் பூட்டோ விடுத்துள்ளார்.

## காங்கிரஸ், தி. மு. க. மாநிலத்தில் மறியல்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவை இருகாங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் மற்றும் தி.மு.க உறுப்பினர் ஆகியோரை பொலிஸார் கைது செய்ததை ஆட்சேபித்து தமிழகமெங்கும் காங்கிரஸ் கட்சியும் தி.மு.கவும் மறியல் போராட்டங்களை நடத்தினர் மாநிலம் எங்கும் பஸ்மறியல், வீதிமறியலில் ஈடுபட்ட இருகட்சியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். கைதான மூன்று சட்டப்பேரவை உறுப்பினர்களும் ஏற்கனவே நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுவிட்டமை தெரிந்ததே

## குடிநீர் ரயிலை மறித்த பாராளு. உறுப்பினர் கைது

நெய்வேலியை சுற்றியுள்ள நாற்பது கிராமங்களில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருப்பதாகவும், இந்தக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்க வேண்டுமென்றும் கோரி போராட்டம் நடத்திய சிதம்பரனார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வள்ளல்பெருமான் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் வள்ளல்பெருமான் தலைமையிலான ஒரு குழுவினர் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்ல முற்பட்ட ரயில் வண்டியை மறித்தபோதுதான் கைது செய்யப்பட்டதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

## வீரப்பனை பிடிக்க வன உளவுப்படை

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனை கைதுசெய்ய, அவனின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கென வன உளவு பிரிவு ஒன்று அமைக்கப்படும் என முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என்றே தெரிவிக்கப்படுகின்றது. தலைநகரில் மக்களின் மனஉணர்வுகளும் இதையே பிரதிபலிப்பதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் முடிவு ஆதரவாகவே இருக்கும் என்று எதிர்பார்த்துள்ள இடைக்கால அரசு ஏற்கனவே அரசியல்சாசனத்தை தயாரிக்க ஆரம்பித்துள்ளது. இதேசமயம் எத்தியோப்பாவில் எரித்திரியா தனிநாடாக மாறுவதற்கு சில எதிர்ப்புகள் காணப்பட்ட போதிலும் தேர்தல் முடிவுகளைதாம் மதித்து நடக்கப்போவதாக எத்தியோப்பிய அரசு அறிவித்துள்ளது.

## ஒழுக்கம் இருந்தாலே போரில் வெல்ல முடியும்

### நெல்சன் மண்டேலா தெரிவிப்பு

(ஜோகனர்ஸ்பெர்க்)

''சுதந்திரத்திற்கான போரில் நாம் வெற்றி பெற வேண்டுமானால் எம்மிடம் ஒழுங்கு, கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஒழுங்கு கட்டுப்பாடு உள்ள ஓர் ஆயுதப்படையினாலேயே போரில் வெற்றி பெற முடியும்.'' என ஆபிரிக்க தேசியகாங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு ஜோகனர்ஸ் பெர்க் அருகில் பொருந் தொகையான கறுப்பின இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்ட கண்டனக் கூட்டம் ஒன்றில் மண்டேலா உரையாற்றினார். இப்பகுதியிலேயே கடந்த வாரம் துப்பாக்கி நபர்களினால் 19 கறுப்பின மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

''இளைஞர்களின் ஆத்திரத்தை நான் புரிந்து கொள்கின்றேன். ஆனால் சுதந்திரப்போரில் ஒழுக்கம் தேவை. உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏ.கே-47 துப்பாக்கிகளை தர முடியும் ஆனால் நீங்கள் ஆபிரிக்க தேசியகாங்கிரஸின் இராணுவப்பிரிவில் இணைந்து ஆயுதப்பயிற்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.'' எனக்குறிப்பிட்ட நெல்சன் மண்டேலா ஒழுக்கமுடைய ஓர் இராணுவ அமைப்பினாலேயே நாம் போரில் வெல்ல முடியும் என வலியுறுத்தினார்.

## பா. ம. க. உறுப்பினர் படுகாயம்

பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர் பிரிவை சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு கும்பல் ஒன்றினால் சுட்டும், வெட்டியும் படுகாயப்படுத்தப்பட்டார். தூத்துக்குடியில் நடந்த இச்சம்பவத்தின்போது கத்தியால் குத்தப்பட்ட இவர் மீது பல தடவை துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. இதனால் இவர் படுகாயமடைந்தார். இத்தாக்குதலினால் இவருடனிருந்த மற்றுமொருவர் பலியானார். இச்சம்பவத்தில் உள்நாட்டு வெடிகுண்டுகளும் பாவிக்கப்பட்டன.

இவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. எவரும் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். களனியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே ஜெயவர்த்தனா

யே இருந்துள்ளார் கட்சியை 1956 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீளக்கட்டி எழுப்புவதிலும் அவரே பெரும் பங்காற்றினார் என ஜெயவர்தனா மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் நிலையத்தில் அமைச்சர் படம் அகற்றம்

(கொழும்பு)

கொழும்பு புறநகர் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியின் அலுவலகத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பெண் அமைச்சர் ஒருவரின் படம் எதிர்கட்சி வேட்பாளர்களின் ஆட்சேபத்தை அடுத்து அகற்றப்பட்டது.

அமைச்சர் ஒருவரின் படம் பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தில் இருப்பது அவர் ஆளும் கட்சி ஆதரவாளர் என்பதையே காட்டுவதாக எதிர் கட்சியினர் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டனர். இதையடுத்தே படம் அகற்றப்பட்டது.

## கூரை வீழ்ந்து அகதிகள் காயம்

வவுனியாவில் கடந்தவாரம் சுழல் காற்றுடன் கூடிய மழை பெய்ததனால் நெலுக்குளம் அகதி முகாமின் கூரை தூக்கி வீசப்பட்டதில் அங்கு வசித்த அகதிகளில் 10 பேர் காயமடைந்தனர். இவர்களில் நான்கு சிறுவர்களும் அடங்குவர். இம்முகாமிலிருந்த அகதிகள் தற்போது தங்க இடமின்றி அவதியுறுகின்றனர்.

## கொழும்பு ஆஸ்பத்திரிக்கு பின்லாந்து நிதி உதவி

பின்லாந்து நாட்டின் உதவியுடன் கொழும்பு பொது மருத்துவமனையின் மூன்றாம் கட்ட அபிவிருத்தி வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இத்திட்டத்திற்கென 9 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. நிதியுதவியின் பெரும் பகுதி பின்லாந்து அரசினால் வழங்கப்படுகின்றது.

கொழும்பு ஆஸ்பத்திரியின் முதல் இரண்டு கட்ட அபிவிருத்தி வேலைகளுக்கும் பின்லாந்து அரசு 20 கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட தொகையை நிதியுதவியாக வழங்கி இருந்தது.

## மூளையை பாதிக்கும் வைரஸ் இலங்கையில் கண்டுபிடிப்பு

[கொழும்பு]

மனித மூளையை பாதிக்கும் வைரஸ் நோய் ஒன்று முதற்தடவையாக இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்களே இந்த வைரஸினால் பாதிப்படைவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு உடனடி சிகிச்சை அளிக்காவிட்டால் மரணம் சம்பவிக்கலாம். கண்பார்வை மங்குதல், தலைவிறைப்பு என்பன இந்நோய்க்கான அறிகுறிகளில் சிலவாகும்.

பதுளையிலிருந்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட நோயாளி ஒருவரில் இந்த நோய்க்கான வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நோய் தொற்றுநோயல்ல என்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்துவதே இந்நோயை தடுப்பதற்கான சிறந்த வழி என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பரிசளிப்பு விழா

புதியகல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நீராவியடி நாவலர் மண்டபத்தில் அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இலங்கை ஆழ்கடலில் அமெ. நிறுவனம் மீன்பிடிப்பு

[கொழும்பு]

அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்று இலங்கையைச் சுற்றியுள்ள 200 மைல் கடற்பிராந்தியத்தில் ஆழ்கடல் மீன்பிடித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் காலி துறைமுகத்திலிருந்து செயற்படும்.

இந்த நிறுவனம் ஏற்கனவே இந்து சமுத்திரத்தில் இத்திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் பிடிக்கப்படும் ரியூனா வகை மீன்கள் பதப்படுத்தி ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இந்த அமெரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாதம்

# பெரிய இனம் சிறிய இனத்தின் மீது தீர்வுகளைத் திணிக்கக் கூடாது

## சட்டத்தரணிகள்சங்கத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இந்தத்தேசிய பிரச்சினை மிக நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமல் இருந்துவருகிறது. அதனாலேயே தமிழர்கள் மத்தியில் எதிர்ப்புச் சிந்தனை ஏற்பட்டது. இது நியாயமான எதிர்ப்புச் சிந்தனைதான். இதனை இராணுவ நடவடிக்கைகளால் வெற்றி கொள்ளமுடியாது. அவ்விதம் செய்வது மேலும் பல பிரச்சினைகளின் எழுச்சிக்கே வழிவகுக்கும். இராணுவ ரீதியிலான வெற்றி எப்போதும் நிலைத்திருக்காது. ஏனெனில் எதிர்ப்புக்கான மூலகாரணிகளை அது நீக்குவதாக அமையாது.

இவ்வாறு யாழ். ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை) ஏற்பாடு செய்திருந்த விருந்துபசார வைபவமொன்றில் உரையாற்றுகையில் இலங்கை சட்டத்தரணிகள்சங்கத்தின் புதிய தலைவர் டி. டபிள்யூ. அபயக்கோன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

உடனடியாக ஓர் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும். இத்தகைய பேச்சுவார்த்தையின் மூலம் ஏற்படுத்தப்படும் தீர்வு உள்ளத்தில் இருந்து இதயபூர்வமாக ஏற்படுத்தப்படவேண்டும் அப்படிச் செய்வதன் மூலமே நமது தேசிய பொருளாதாரம் எதிர்நோக்கியுள்ள பேரழிவையும் யுத்தத்தின் பாவங்களையும் போக்கமுடியும். வாழ்க்கைத்தரம் சீரழிவதிலிருந்து பாதுகாக்கப்பட்டு நாட்டின் எதிர்காலத்தை அப்போதுதான் சுபீட்சத்திற்குக் கொண்டுவரமுடியும்.

தமிழர்களினால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத எந்த ஒரு தீர்வு நடவடிக்கையும் தீர்வாகாது. பெரும்பான்மை தேசிய இனத்தின் விருப்பத்தினை சிறுபான்மை தேசிய இனத்தின் மீது திணிக்கமுயன்றதால் ஏற்பட்ட விளைவை நாம் அனுபவ வாயிலாக அறிந்திருக்கிறோம். ஆகவே நாம் தொடர்ந்தும் இத்தகைய முயற்சிகளினால் நாட்டின் செல்வத்தை விரயம்செய்யக் கூடாது.

அரசியல்வாதிகள் ஆரம்பத்திலேயே தமிழர்களின்உரிமைக் கோரிக்கைகள் தொடர்பாக ஒரு நியாயமான தீர்வினைத் தேடியிருந்தால் இன்று நாம் இத்தகைய துரதிர்ஷ்டவசமான காலகட்டத்தை அடைந்திருக்கமாட்டோம். தமிழர்களின் உரிமைப்பிரச்சினையின் ஆரம்பம் ''டொனமூர் ஆணைக்குழு'' ஏற்படுத்தப்பட்ட காலத்திலேயே தோற்றம் பெற்றுவிட்டது என்றார்.

மேலும் வட-கிழக்குப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை ஏற்படுத்துவதில் அரசியல்வாதிகள் தாமதம்செய்து வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

## கலந்துரையாடல்

(தொல்புரம்)

எதிர்வரும் மேதினம் சிறப்பாகவும், ஒழுங்கு முறைக்கு அமைவாகவும் நடைபெறும் பொருட்டு முன் ஏற்பாடாக கலந்துரையாடல் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் நிகழ்ச்சி எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் சித்தன்கேணிச் சந்தி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சுழிபுரம் வலிமேற்குப் பிரதேச சபையைச் சேர்ந்த சகல சனசமூக நிலையங்களது நிர்வாகசபை உறுப்பினர்களையும்தவறாதுகலந்து கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் திரு. எஸ். ரீ. கதிரவேற்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## இலக்கத்தகடு விநியோகம்

1993ஆம் ஆண்டிற்கான வாகன அனுமதி இலக்கத்தகடுகள் வலிமேற்குப் பிரதேச சபையினால் வழங்கப்படுகிறது.

மேற்படி அனுமதித் தகடுகளை மாட்டுவண்டி, துவிச்சக்கர வண்டி, மற்றும் வாகனச் சொந்தக்காரர்கள் சங்கானை, வட்டுக்கோட்டை சுழிபுரம், அராலி ஆகியவற்றின் உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாமென வலிமேற்கு பிரதேசசபைச் செயலாளர் திரு எஸ். ரி. கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். (41)

# அ.தி.மு.க. அரசிற்கு எதிராக எதிரணிகள்மகஜர்சமர்ப்பிப்பு

(தமிழ்நாடு)

தமிழ்நாட்டில் ஆளும் அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், சட்டப்பேரவை சபாநாயகருக்கும் எதிரான புகார் குறித்த மகஜர் ஒன்றை இந்திரா காங்கிரஸ், சி. பி. எம்., சி. பி. ஐ எம். மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி என்பனவற்றைச்சேர்ந்த எம் எல். ஏக்கள் நேற்று மாநில ஆளுநரிடம் சமர்ப்பித்தனர்

சட்டப்பேரவையை சரியாக செயல்படுமாறும் சபாநாயகர் பாரபட்சம் இன்றி நடந்து கொள்ளுமாறு, பார்த்துக் கொள்ளுமாறும் ஆளுநரை இந்த எம். எல். ஏக்கள் கேட்டுக்கொண்டனர்.

முன்னதாக இந்திரா காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரான ராஜேந்திரன் நேற்றுக் காலை சட்டப்பேரவையை விட்டு வெளியே வந்தபோது கைதுசெய்யப்பட்டார். சென்ற புதன்கிழமை சட்டப்பேரவை வளாகத்திற்குள் சபைக் காவலர்களைத் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட எம் எல். ஏக்களில் திரு. ராஜேந்திரனும் ஒருவர். இவர் பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

## கலந்துரையாடல்

(வடமராட்சி)

மே தினம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். (யோ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் ''கிராமிய தலைமையில் பெண்கள் பங்கு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றினை நாளை ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் தெற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடாத்தவுள்ளது.

சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சரஸ்வதி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உட்பட அப்பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50ற்கு மேற்பட்ட இளம் பெண்கள் பங்குபற்றவுள்ளனர்.

கிராமிய மட்டத்தில் பெண்கள் தகைமையை உருவாக்குவதே இக்கருத்தரங்கின் நோக்கமென அதன் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## சபாலிங்கம் நினைவு பேருரை

முன்னாள் யாழ். இந்து அதிபர் அமரர் இளையதம்பி சபாலிங்கம் அவர்களின் நினைவாக யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நினைவுப் பேருரை நாளை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறுகின்றது.

இந் நினைவுப் பேருரையில் ''யாழ்ப்பாணத்தில் சைவக்


## யாழ். இந்துக்கல்லூரி

ஆண்டு 7 அனுமதி - 1993

(1992ஆம் ஆண்டு ஏப்பிரலில் நடைபெற்ற 1991ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992ஆம் ஆண்டு ஏப்பிரலில் நடைபெற்ற 1991ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இவ்வருடம் ஆண்டு 7இல் அனுமதி வழங்கப்படவுள்ளது

இவ் அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைக் கல்லூரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 29-4-1993.

யாழ்ப்பாணம்.

23-4-1993 அதிபர்

(சி/6492) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## அறிவித்தல்

சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல்

இன்று [24- 04- 1993] சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(4739) –நிர்வாகம்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

23-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9104

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-6075, 26-4139, 24-9825, 26-5351 24-5460 43-3854, 28-1110, 27-8160

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-2151, 41-7693, 41-9211, 26-3495, 27-9033 42-3924, 24-5036, 26-3812, 26-2414, 24-8429 27-6439, 41-8467, 26-0672, 26-5850


## 31-ம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டிகிரியை அழைப்பும்



## அழைப்பு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான

அமரர்

**இளையதம்பி சபாலிங்கம்**

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

அவர்களை நினைவு கூருமுகமாக

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

**நினைவுப் பேருரை**

''யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்''

நிகழ்த்துபவர்: பேராசிரியர் வ. ஆறுமுகம்

(பேராசிரியர் - கல்வியியற்துறை யாழ் பல்கலைக்கழகம்)

காலம்: 25-04-93 ஞாயிறு [நாளை]

நேரம்: பிற்பகல் 3.30 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

## ஸ்ரீதர் திரையரங்கில்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டிகிரியை] அழைப்பும்



புத்தூர்மேற்கு, நவக்கிரியை பிறப்பிடமாகக்கொண்ட

### திருமதி ஆறுமுகம் சரஸ்வதி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04.03.1902 | 25.03.1993 |

அன்பெனும் ஆலமரம் சரிந்தது
பாசத்தின் சிகரம் வீழ்ந்தது.

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்ட எங்கள் அன்புத்தெய்வமே ஒரு மாதம் அல்ல; ஒரு யுகம் சென்றாலும் உங்கள் அன்புத் திருவுருவமும், நினைவுகளும் என்றும் எம்மைவிட்டகலாது.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:- சிவபாக்கியம், சுப்பிரமணியம், வெள்ளைத்தம்பி, காலஞ்சென்ற தங்கராசா, நடராசா.

மருமக்கள்மார்: காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னமணி, மகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, மனோரஞ்சிதம்.

பேரப்பிள்ளைகள்:- தனலக்ஷ்மி, நாகேஸ்வரி, சிவகுமார், தருமசேகரம், தருமபூபதி, தருமதேவி, தருமதேவன், காலஞ்சென்ற தருமகுமார், தருமசாந்தினி, உதயகுமாரி, விஜயகுமாரி, சாந்தகுமாரி சந்திரகுமாரி, ராஜ்குமார், சதீஸ்குமார் (மாவீரர்), சுரேஷ்குமார், சுதாகரன் (போராளி), கலாதேவி, கலாமோகன் (போராளி), தருமகுலதேவி (போராளி), இரவீந்திரதேவி (மாவீரர்), பாஸ்கரமோகன் (போராளி), பகீரதன், பகீரதி, வளர்மதி.

வேம்போடுகேணி,
இத்தாவில், பளை. (4745)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அதிபர்களில் ஒருவரான
அமரர்

### இளையதம்பி சபாலிங்கம்

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
அவர்களை நினைவு கூருமுகமாக

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
நடாத்தும்

### நினைவுப் பேருரை

''யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்''
நிகழ்த்துபவர்: பேராசிரியர் வ. ஆறுமுகம்
(பேராசிரியர் - கல்வியியற்துறை யாழ் பல்கலைக்கழகம்)


காலம்: 25-04-93 ஞாயிறு [நாளை]
நேரம்: பிற்பகல் 3.30 மணி
இடம்: குமாரசாமி மண்டபம்

அமரரின் உறவினர்கள், ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி-6493)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 02 | 24 |
| — | — |
| 04 | 04 |
| — | — |
| 1963 | 1989 |

### கப்டன் ரங்கன்

[துரைசிங்கம் ஜெயரங்கன்]

வீட்டுக் குழைக்கவெனப் பிறந்த நீ — ஈழ
நாட்டுக்காய் இன்னுயிரை ஈந்தாயே
ஓட்டிடுவோம் அந்நியனை என்றுழைத்து — மன
ஓர்மமுடன் போரிட்ட எம்ரங்கா!
வாட்டுதடா உன்பிரிவு எம்மவரை — இன்றோடு
போட்டுதடா நாலாண்டு நெஞ்சுநிறை
ஊட்டமென நிற்பாயே உறுதுணையாய்.

அம்மா, சகோதர - சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
ஏழாலை. (4749)

வதி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உட்பட அப்பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50ற்கு மேற்பட்ட இளம் பெண்கள் பங்குபற்றவுள்ளனர்.

கிராமிய மட்டத்தில் பெண்கள் தலைமையை உருவாக்குவதே இக்கருத்தரங்கின் நோக்கமென அதன் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

### சபாலிங்கம் நினைவு பேருரை

முன்னாள் யாழ். இந்து அதிபர் அமரர் இளையதம்பி சபாலிங்கம் அவர்களின் நினைவாக யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நினைவுப் பேருரை நாளை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறுகின்றது.

இந் நினைவுப் பேருரையில் ''யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்'' என்கின்ற தலைப்பில் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் உரை நிகழ்த்துகின்றார்.

### கொழும்பில்

காயமடைந்ததுடன் 7 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த மாணவர்கள் அனைவரும் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### ஜனாதிபதி

நாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கோ தமிழர் பிரச்சினையில் எவ்விதமான கரிசனையும் கிடையாது. தமிழர்கள் இப்போது கொண்டுள்ள சலுகைகளை விடக் குறைந்த சலுகை ஏதாவது ஒன்றை வழங்குவதானால் அதற்கு மட்டுமே அவர்களால் முடியும். இந்த நிலைமையில் தமிழர்கள் இந்தக் கட்சிகளை நிராகரித்துவிட வேண்டும் என்றும் குமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் 12சத விகித இலங்கைத் தமிழர்களும், 5சதவிகித அண்மைக் காலத்திய இந்திய வம்சாவழித் தமிழர்களும் இருக்கின்றனர். எதையும் இன விகிதாசார அடிப்படையில் பார்ப்பது இன்றைய போக்காகும். இந்த விகிதாசார அடிப்படையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால், அதுநிலம் நீர், 'ஆகாயம்' உட்பட தேர்தலில் வேட்பாளர் பட்டியல் எல்லாமே அந்த அடிப்படையில் தான் இருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகள் அண்மைக் காலத்திய இந்திய வம்சாவழித் தமிழர்களின் அபிலாசைகளை விடவித்தியாசமானவை. அண்மைக்காலத்திய இந்திய வம்சாவழித் தமிழர்கள் சிலர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கரிசனை காட்டினார்கள். இது இலங்கைத் தமிழர்களை அவமானப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 23-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9104

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-6075, 26-4139, 24-9825, 26-5351 24-5460
43-3854, 28-1110, 27-8160

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
42-2151, 41-7693, 41-9211, 26-3495, 27-9033
42-3924, 24-5036, 26-3812, 26-2414, 24-8429
27-6439, 41-8467, 26-0672, 26-5850

### ஸ்ரீதர் திரையரங்கில்
# 100 RIFLES
[100 துப்பாக்கிகள்]
தமிழ் விளக்கம்
தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி
[சி-6376]


## மரண அறிவித்தல்
### அமரர் ஆ. சி. நடராசா

நயினாதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டடியில் வசித்தவருமாகிய பத்திரிகை விற்பனை முகவர் ஆ. சி. நடராசா 23-04-93 வெள்ளிக்கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார். அன்னார் நயினாதீவு ஸ்ரீநாகபூசணியம்மன் ஆலய கொடியேற்ற உபயகாரரும், நயினாதீவு பிடாரி அம்மன் ஆலய உரிமையாளரும், யாழ்ப்பாணம் பஸ்நிலைய ஸ்ரீஞான வைரவர் ஆலய அறங்காவல் செயலாளரும் ஆவார். இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (புனர்வாழ்வுத் திணைக்களம் யாழ். செயலகம்), கதிரவேற்பிள்ளை, யுகலெட்சுமி, ஜெயவர்த்தனா, (பிரான்ஸ்), திலகவதி, மாலினி, வரலெட்சுமி (கனடா), மாவீரன் இரண்டாவது லெப்டினன்ட் சிவசேது ஆகியோரின் பாசமிகு தந்தையும், உருத்திராம்பாள், சாரதாதேவி, லோகநாதன், கலாமதி (பிரான்ஸ்), கனகலிங்கம், தயானந்தன், பிரநாபன் (கனடா) ஆகியோரின் மாமனாருமாவார். பாக்கியலெட்சுமி, பரமசாமி, பத்மநாதன், பழனிவேல், குணரெட்ணம், சோதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியம், கோணேஸ்வரி, ஜெயலட்சுமி, சிவனேசரத்தினம், மாசிலாமணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (24-04-93) சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு 168 2 முத்தமிழ் வீதி, கொட்டடியில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: ஆ. சி. பரமசாமி (சகோதரர்)
கொட்டடி. ந. பாலசுப்பிரமணியம் (மகன்)
(சி/6494)